1972 டிசம்பர் 8]

* 84 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether postings by promotions have been made for the posts of Gazetted Headmasters sanctioned for 'A' grade schools since the implementation of the recommendations of the Second Pay Commission; and

(b) if not, the reason for the delay?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 20—2—1971 தேதியிட்ட அரசு ஆணை 289 (கல்வி)-ல் அரசுப் பயிற்சிப் பள்ளிகளுக்கு 25 அரசிதழ் பதிவுள்ள தலைமை ஆசிரியர்கள் பதவிகளும் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 15 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன.

இப்பணியிடங்கள் யாவும் நிறைவு செய்யப்பட்டுவிட்டன.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is stated that, schools now started by the Government are classified as 'A' Group and the schools taken over from the old District Boards are classified as 'B' Group. There is a lot of disparity in regard to emoluments, etc. of the teachers employed in these schools and there is also inferiority complexes felt by the teachers of the old District Board schools. So, may I know from the Hon. Minister whether he will remove this disparity and other things in the emoluments of the teachers in these two sets of schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற துணைக் கேள்வி முதற் கேள்விக்குரியதாகும். இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று நான்காண்டு காலமாக இரண்டு துறையினரும் சேர்ந்து பேசிய பிறகும் சரியான முடிவு எட்டாததன் காரணமாக 'ஏ விங்' என்றும் 'பி விங்' என்றும் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக ஆக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. இரு சாராரைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ஒருமித்த முடிவுக்கு வருவார்களானால் அதுபற்றிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கெசடட் ஹெட்மாஸ்டர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சீனியாரிடி அடிப்படையில்தான் பதவி உயர்வு பெறுகிறார்கள். அப்படி நியமிக்கப்படுகிறவர்கள் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில்தான் போடப்படுகிறார்கள். சில இடங்களில் சில தலைமை ஆசிரியர்கள் தவறு செய்தால், அவர்களை மாற்றி வேறு ஆயிரம் மாணவர்கள்

உள்ள பள்ளிகளுக்குத்தான் போட வேண்டுமென்று இருக்கிறது. அப்படிப் போடுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, பதவி உயர்வு கொடுப்பது சீனியாரிடி அடிப்படையில் என்றாலும், அவர்களை மாற்றம் செய்து எந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போடலாம் என்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களில் கெசடட் பிரிவு என்று ஏற்படுத்தப்பட்ட பிறகு, அவர் பணியாற்ற வேண்டிய பள்ளிகளிலும் ஒரு குறிப்பிட்ட மாணவர்கள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவேதான் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில்தான் அவர்களைப் போட வேண்டுமென்று முறை வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட பள்ளிகள் பல மாவட்டங்களில், பல்வேறு பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு இடத்திலிருந்து அவர்களை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதில் அதிக கஷ்டம் ஏற்படுவது இல்லை. உள்ளபடியே யாரேனும் தவறு செய்திருப்பார்களானால், அப்படித் தவறு செய்தவர்கள் மீது முறைப்படி நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு வருவதற்கும் வழி இருக்கிறது. இப்போதிருக்கின்ற முறையினால் பாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவரவர்களே, தற்போது 'எ' கிரேட் பள்ளிகள், 'பி' கிரேட் பள்ளிகள் என்று எந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன? அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் இரு ஆசிரியர்களையும் ஒன்றுக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. அரசாங்கப் பள்ளிகளை 'ஏ' விங் என்றும், டிஸ்ரிக்ட் போர்ட்டிலிருந்து அரசாங்கத்தோடு இணைக்கப்பட்ட பள்ளிகளை 'பி' விங் பள்ளிகள் என்றும் ஆக்கியிருக்கிறோம். அவற்றை ஒன்றுக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மேலும், அங்கேயிருக்கும் ஆசிரியர்கள் அல்லது பணியாளர்களுக்கு பதவி உயர்வு என்று வருகிறபோது சில சங்கடங்கள் வருகின்றன. அதை யெல்லாம் தீர்க்க முடியாத காரணத்தால் தான் அது தனிப் பிரிவாக வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் ஒன்றுக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, இந்த 'எ', 'பி' என்ற இரண்டு பிரிவுகளை வைத்துக்கொண்டு நிர்வாக இலாக்கா படுகிறபாடு எங்களைப் போன்றவர்களுக்குத்தான் தெரியும். காரணம், ஏதாவது தகாறு ஏற்பட்டால் அது 'ஏ' பிரிவு எங்களால் ஒன்றும் முடியாது, அது 'பி' பிரிவு எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று நிர்வாகத்தினர் கூறிவிடுகிறார்கள்.

[1972 டிசம்பர் 8]

சமீபத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், ஒவ்வொரு நாளும் இந்தப் பிரச்னை வந்து கொண்டேயிருக்கிறது, இதற்கு அரசாங்கம் தான் தீர்வு காண வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, அடுத்த கல்வியாண்டிற்குள்ளாவது இந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக ஆக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 'ஏ' விங், 'பி' விங் இரண்டையும் ஒன்றாக ஆக்குவதினாலே அரசாங்கத்திற்குச் சங்கடம் இல்லாமல் இருக்கும். நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் ஒன்றாக இருப்பது தான் நல்லது. ஒவ்வொரு ஆசிரியர்களுக்கு ('ஏ', 'பி' விங்கில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு) அவர்கள் பணியில் சேர்ந்த ஆண்டிலிருந்து சீனியாரிடி தருவது என்று சொன்னால், 'ஏ' விங்கில் இருக்கும் தலைமை ஆசிரியர்கள், 'பி' விங்கில் இருக்கும் தலைமையாசிரியர்கள் பலபேரை அப் பதவியிலிருந்து கீழே இறக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஏற்கனவே அப் பதவியை வகித்துவிட்டவர்கள் அப் பதவியிலிருந்து இறங்க மறுக்கிறார்கள். இந்த இரண்டு பிரிவில் இருப்பவர்களும் ஒன்றாக இணைந்து பேச்சு வார்த்தை நடத்தி, அவர்களுக்குள்ளாகவே ஒரு முடிவுக்கு வந்து இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக இணைக்கலாம் என்று வருவார்களானால் நிர்வாகத்திற்கு அதிக சங்கடம் இல்லாமல் இருக்கும். அவர்களை ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து, அதை அவர்கள் அரசுக்கு அறிவிப்பார்களானால், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில்தான் கெசட்ட் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நீலகிரியில் உள்ள பள்ளியில் ஆயிரம் மாணவர்கள் இல்லை. 500 மாணவர்கள் கூட பள்ளிகளில் இருப்பது இல்லை. அங்கே இந்த விதியைத் தளர்த்தி கெசட்ட் தலைமையாசிரியரை நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.